17.02.2026.

OS.459/2024

PW1– கோமதிநாயகம் – S/o. குத்தாலம்பிள்ளை

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 17.02.2026.

குறுக்கு விசாரணை : (பிரதிவாதி தரப்பில்)

1. முதல்விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள முகவரியில் தான் நான் தொடர்ந்து நிரந்தரமாக வசித்துவருகிறேன் என்றால் சரிதான். என்ன தொழில் செய்துவருகிறேன் என்றால் விவசாயம் செய்துவருகிறேன்.

2. கடந்த 13.09.1980 தேதி தபசில் சொத்தை பொறுத்து நான், என் சகோதரரான 1ம்பிரதிவாதிக்கு கிரையம் செய்துகொடுத்துள்ளேன் என்றால் சரிதான். அது பெயரளவிலான கிரையம். மேற்படி கிரையத்தையும் நாளதுவரை ரத்து செய்யவில்லை என்றால் சரிதான். நீதிமன்றம் அதை செல்லாது என கூறிவிட்டதால் நான் மேல்நடவடிக்கை எடுக்கவில்லை.

3. ஏற்கனவே நான் தாக்கல் செய்த வழக்கில் 13.09.1980 கிரைய ஆவணத்தை ரத்து செய்ய கோரி பரிகாரம் கேட்டேனா என்றால் மறைமுகமான பரிகாரம் கேட்டேன்.

4. கடந்த 16.12.1989 ம்தேதி எங்கள் குடும்பத்திற்குள் ஓர் உடன்டிக்கை ஏற்பட்டது என நான் கூறியுள்ள நிலையில் ஏன் அந்த உடன்படிக்கை ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் அது நகல் ஆவணமாக இருப்பதால் அசல் இல்லாததால் தாக்கல் செய்யவில்லை.

5. 13.08.1980 கிரைய ஆவணத்தை நான் மீண்டும் வாழ்விப்பு எடுத்தற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல, எங்களுக்கு ஆதரவாக தீர்ப்பாணை உள்ளது.

6. இந்த வழக்கில் சொல்லியுள்ள சங்கதிகள் தான் முன்வழக்கிலும் நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

7. இந்த வழக்கிற்கும், முன்வழக்கிற்கும் சம்மந்தம் உண்டா என்றால் சம்மந்தம் இல்லை.

8. முந்தைய வழக்கின் எண்ணானது அம்பாசமுத்திரம் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.42/1994 என்றால் சரிதான்.

9. அ.வ.எண்.42/1994 ஆனது பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்ப்பாணை பெறப்பட்டது என்றால் சரிதான்.

10. அ.வ.எண்.42/1994 வழக்கில் நான் கோரிய 2 பரிகாரங்களில் வழக்கு சொத்தினை வேறு நபர்களுக்கு வில்லங்கம் ஏற்படுத்தக்கூடாது என கோரிய செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன்பேரில் மேல்முறையீடு செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

11. தற்போதும் தபசில் சொத்து அனுபவம் என்வசம் உள்ளது என்பதை காண்பிப்பதற்கு என்ன ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், ஏற்கனவே அ.வ.எண்.42/1994 ன் தீர்ப்பாணை தாக்கல் செய்துள்ளேன்.

12. 2,3 பிரதிவாதிகள் உழவடைபாத்தியர்கள் என வாதம் செய்கிறேன் என்றால் சரிதான். 2,3 பிரதிவாதிகள் உழவடைபாத்தியர்கள் இல்லை என கட்சி செய்கிறார்கள் என்றால் சரிதான்.

13. 2,3 பிரதிவாதிகள் என் உத்தரவின் பேரில் உழவடைபாத்தியம் செய்கிறார்கள் என்பதற்கு அடங்கல் கணக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், வருவாய்துறையினர் அடங்கல் நகல் தரவில்லை.

14. நீதிமன்றத்தின் மூலம் வருவாய் அதிகாரிகளுக்கு அழைப்பாணை அனுப்பினால் 2,3 பிரதிவாதிகள் உழவடைபாத்தியர்களா இல்லையா என்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான்.

15. 2,3 பிரதிவாதிகளுக்கும், 2ம் பிரதிவாதியின் கணவர் முருகன் பெயருக்கு ஏதேனும் பாட்டம் பெற்று ரசீது வழங்கியுள்ளேனா என்றால் இல்லை, தாள் இல்லை என்று எழுதிக்கொடுத்தேன், அதற்கும் முருகனுக்கம் சம்பந்தமில்லை. நான் வழக்கிற்காக தவறாக கூறுகிறேன்என்றும், 2,3 பிரதிவாதிகள், முருகன் ஆகியோர்கள் எனக்கு பாட்டாம் செலுத்தியதில்லை என்றும், அவர்கள் உரிமையாளர்கள் நிலையில் அனுபவம் செய்துவருகிறார்கள் என்றால் சரியல்ல.

16. 2ம் பிரதிவாதியின் கணவர் பெயரில் ஏற்பட்டுள்ள 06.06.2011 தேதிய கிரையத்தை பொறுத்து கிரையத்தை ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான், நீதிமன்ற தீர்ப்பு உள்ளதால் நடவடிக்ககைஎடுக்கவில்லை. சாட்சி மீண்டும் தற்போது தான் தெரியவந்ததுஎன பதிலளித்தார். எப்போது ஆவணம் பற்றிய விவரம் தெரியவந்தது என்றால் 2020ம் வருடம் தெரியவந்தது.

17. நான் வழக்கிற்காக தவறாக கூறுகிறேன் என்றும், 2011ம் வருடம் கிரையம் ஏற்பட்டபோதே கிரையம் தெரியும் என்றால் சரியல்ல.

18. வழக்கு சொத்தின் சர்வே எண்.510/2 என்றால் சரிதான்.என்னிடம் காண்பிக்கப்படுவது சர்வே எண்.510/2ன் கணினி வழி பதிவிறக்கம் செய்யப்பட்ட இணையதள பட்டா என்றால் சரிதான். **பட்டாவானது பி.வா.சா.ஆ.1 ஆக வா.சா.1 குறுக்குவிசாரணையில் குறியீடு செய்யப்படுகிறது.** பி.வா.சா.ஆ.1 பட்டா எண்.2335 முருகன் பெயரில் உள்ளது என்றால் சரிதான், அது செல்லாத ஆவணமாகும்.

19. பி.வா.சா.ஆ.1ன் மீது அதை ரத்து செய்ய என்ன மேல்நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் நடவடிக்கை எடுத்துள்ளேன், அதன் நகல் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கவில்லை.

20. அ.வ.எண்.42/1994 வழக்கில் 12ம் பிரதிவாதி சங்கிலி என்பவர் தரப்பினராக உள்ளார் என்றால் சரிதான். அ.வ.எண்.42/1994 வழக்கில் 12ம் பிரதிவாதி சங்கிலி எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான்.

21. 12ம் பிரதிவாதி சங்கிலி எதிர்வழக்குரை தாக்கல் செய்த நிலையில் அதன்பேரில் என்ன நடவடிக்கை நான் எடுத்துள்ளேன் என்றால் அதற்கு எதிராகதான் தீர்ப்பு வழங்கப்பட்டுளள்து.

22. 2,3 பிரதிவாதிகளோ, அவர்களது முன்பாத்தியஸ்தர்களோ யாதொரு காலத்திலும் என்னிடம் உழவடை பாத்தியதர்களா இருந்தது இல்லை என்றும், 1ம் பிரதிவாதியிடம் முறையான கிரையம் பெற்று நல்லெண்ணத்தின்பேரில் அடிப்படைடயில் பெற்ற கிரையத்தால் அனுபவ மாற்றம் ஏற்பட்டு 2,3 பிரதிவாதிகள் நாளதுவரை வழக்கு சொத்தில் எந்த இடையூறும் இன்றி அனுபவம் செய்துவருகிறார்கள் என்றும், நான் தான் அவர்கள் மீதுள்ள காழ்ப்புணர்ச்சி காரணமாகவும், அவர்களுக்கு இடையூறு ஏற்படுத்தியும், இடத்தை அபகரிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

23. 2011ம் ஆண்டில் பிறப்பிக்கப்பட்ட கிரையமானது 2020ம் ஆண்டு தெரிந்தும் உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்காததால் காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

24. எனக்கும், 2,3 பிரதிவாதிகளுக்கும் உரிமையாளர், உழவடை பாத்தியதர் உறவுமுறை இல்லைஎன்றால் சரியல்ல.

25. உண்மையில் உறவுமுறை இருந்திருந்தால் வருவாய் அதிகாரிகளிடம் முறையான வழக்கு தாக்கல் செய்து அதன் மூலம் தீர்வு காணவேண்டும் என்றும், இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு சட்டப்படி

தடை செய்யப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதியின் கணவர் முருகனின் சட்டவாரிசுகளை நான் இவ்வழக்கில் கட்சி சேர்க்காததால் அவசிய தரப்பினரை கட்சி சேர்க்காததால் இவ்வழக்கை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி